# அ. தி. மு. க. முன்னணியில்!

விலை சதம் 25

# ஈழநாடு

மலர் 6 The Eelanaadu இதழ்: 17

யாழ்ப்பாணம் மாசி 15 ஸபர் 4 புதன்கிழமை 27—2—74

JAFFNA ... LIBRARY 28 FEB 1974

## தி. மு. க. பெரும் தோல்வி!!

சென்னை. பெப். 26

பாண்டிச்சேரியில் இடம்பெற்ற மாநில சட்டசபைக்கான இடைத்தேர்தலின் இன்றிரவு பத்திரிகை அச்சுக்குப்போகும்வரை வெளியான முடிவுகளின்படி திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தலைமையிலான அண்ணா தி. மு கழகம் 9 இடங்களைப்பெற்று முன்னணியில் இருந்தது.

பிரதமர் இந்திரா காந்தியின் காங்கிரஸ் கட்சி 6 இடங்களையும் திரு. காமராஜ் தலைமையிலான ஸ்தாபன காங்கிரஸ்கட்சி 2 இடங்களையும் பெற்றிருந்தன.

வெளியான 20 தொகுதி முடிவுகளில் ஒரு தொகுதியில் தானும் இதுவரை ஆட்சியிலிருந்த தி. மு. கருணாநிதி தலைமையிலான தி. மு. கழகம் வெற்றிபெற்றிருக்கவில்லை.

இரவு கிடைத்த முடிவுகளின்படி கட்சிகளின் நிலைவரம் பின்வருமாறு:-

| | |
|---|---|
| வெளியான முடிவுகள்: | 20 |
| அ. தி. மு. க. | —9 |
| காங்கிரஸ்கட்சி | —6 |
| ஸ்தாபனகாங்கிரஸ் | —2 |
| இ. கம்யூனிஸ்ட் | —1 |
| மார்க்ஸியக கம்யூனிஸ்ட் | —1 |
| சுயேச்சை | —1 |

தொகுதிவாரியாகக் கிடைக்கப்பெற்ற விபரங்கள் வருமாறு:-

நெட்டபாக்கம் தொகுதியில் காங்கிரஸ்கட்சி மாநிலக் கமிட்டித் தலைவர் திரு. வெங்கட சுப்பா ரெட்டியார் வெற்றி பெற்றுள்ளார். இவர் ஒரு முன்னாள் முதலமைச்சராவர்.

வாகூர்றிசர் தொகுதியை காங்கிரஸ் கட்சியிடமிருந்து பாரத கம்யூனிஸ்ட்கட்சி கைப்பற்றியுள்ளது

இத் தொகுதியில் பாரத கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. தங்கவேலு இளமன்சோ வெற்றி பெற்றார்.

முத்தியால் பேட்டை தொகுதியில் அண்ணா தி. ... திரு. ... ராஜ் 4315 வாக்குகள் பெற்று வெற்றிபெற்றுள்ளார். இத் தொகுதியில் முன்னாள் தி. மு. க. மொழுடா திரு. முருகையன் தி மு கழகம் சார்பில் போட்டியிட்டார். ஸ்தாபனகாங்கிரஸ் வேட்பாளர் இரண்டாவதாக வந்தார். தி. மு க. வேட்பாளர் மூன்றாவது இடத்தைப் பெற்றார்.

ராஜ்பவன் தொகுதியை காங்கிரஸ் உறுப்பினர் திரு. தனகாந்திராஜ் மீண்டும் கைப்பற்றியுள்ளார். இத்தொகுதியில் சட்டப்பேரவைத் தலைவர் திரு. எம். எஸ். செல்வராஜ் போட்டியிட்டார். இவர் தி. மு. க. சார்பிலும், திரு. ஜோதி அ. தி. மு. க. சார்பிலும் போட்டியிட்டுத் தோற்றனர்.

காசுக்கடை தொகுதியை ஸ்தாபன காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது.

உழவர்கரைதொகுதியில் அண்ணா தி. மு. க. வேட்பாளர் திரு. வேணுகோபால் வெற்றி பெற்றுள்ளார்.

கோட்டச்சேரி தொகுதியில் அண்ணா தி. மு. கழகத்தின் பி. சுப்பையா வெற்றி பெற்றார். ஸ்தாபன காங்கிரஸ் கட்சியிலிருந்து இத்தொகுதியை அ. தி. மு. க. கைப்பற்றியுள்ளது.

காசுக்கடை தொகுதியில் ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. அன்சாரி துரைசாமி வெற்றிபெற்றுள்ளார்.

ஏம்பலம் றிசாவ்தொகுதியில் ... காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. எம். முருகேசு வெற்றி பெற்றார்.

காரைக்கால் தொகுதியை அண்ணா தி. மு. க. வேட்பாளர் திரு. கே. காந்தி கைப்பற்றினார். காங்கிரஸிலிருந்து இத்தொகுதி அ. தி. மு. க. வுக்கு வந்துள்ளது.

மாகே தொகுதியில் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. கே. ராகவன் வெற்றிபெற்றார்.

[2-ம் பக்கம் பார்க்க]

## மன்னார் தேர்தல் பற்றி கூட்டணிப் பிரமுகர்

# அரசியலமைப்பை

# தமிழர் ஏற்கவில்லை

# என்பது உறுதியான தீர்ப்பு

(யாழ்ப்பாணம், புதன்) ... இத்துடன் புதிய அரசியல் வெளிப்படும் ... தமிழ்மக்கள் அரசாங்கம் ... மக்கள் அளித்த தீர்ப்பு ஏற்றனரா என்பதை பாளரை நியமிக்கவில்லை. அரசியல் அமைப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது."

மன்னார் தேர்தல் முடிவு பற்றி தமிழரசுக்கட்சி செயலாளரும், கோப்பாய் எம். பி யுமான திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

மன்னார் தேர்தல் பிரசாரத்தில் ஐக்கியதேசியக்கட்சி புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவோம் எனப் பிரசாரக் கூட்டங்களில் தெரிவித்தது. தமிழரசுக்கட்சியும் அரசியல் அமைப்பை ஏற்கவில்லை. இதனால் மன்னாரில் உள்ள 100 வீதமான மக்களும் புதிய அரசியல் அமைப்பை ஏற்கவில்லை என்பதை யு. என். பி.க்கும், தமிழரசுக்கட்சி அபேட்சகருக்கும் கிடைத்துள்ள வாக்குத் தொகையிலிருந்து வெளிப்படையாகிறது.

## அரிசி கொண்டு வந்த 8 பேர் பொலிசில்!

(மாவிட்டபுரம், செவ்வாய்) அனுமதிப்பத்திரமின்றி அரிசி கொண்டு சென்ற 3 பெண்கள் உட்பட 8 பேர் காங்கேசன்துறை பொலிசாரிடம் அகப்பட்டனர்.

அரிசியைக் கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் எதுவுமின்றி கொண்டு சென்ற கரவெட்டி வடக்கைச் சேர்ந்த முருகன் அருஞ்செல்வம், ரஞ்சன் மார்க்கண்டு, கணபதி இராசா, சின்னப்பொடி கதிரவேல், மு. சேதுலிங்கம், வை. பொன்னு (பெண்), இ. தவமணி (பெண்), வெ. கௌரி (பெண்) ஆகிய எட்டுப்பேர்கள் வசாவிளானில் வைத்து காங்கேசன் துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் எல்லோரிடமும் இருந்த சுமார் 15 மூடை அரிசியை காங்கேசன்துறைப் பொலிசைச் சேர்ந்த வி. பி. அபயவிக்கிரமா, லக்ஸ்ஸ்ரீ ஆகியோர் கைப்பற்றினார்கள். அரிசியும், இவர்களும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன் இவர்கள் மல்லாகம் நீதிபதிமுன் விரைவில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

அரிசி கொண்டுசெல்வது சம்பந்தமான சட்டம் கொண்டுவரப்பட்ட பின் காங்கேசன் துறைப் பொலிசார் முதன் முதலாக கைப்பற்றிய அரிசி இதுவாகும்.

## கோயம்புத்தூர் லோகசபை தொகுதி

சென்னை, பெப். 26

கோயம்புத்தூர் லோக்சபா தொகுதியில் இன்று நள்ளிரவு வரையில் முடிவு வெளிவரவில்லை. கம்யூனிஸ்ட்கட்சி வேட்பாளர் திருமதி பார்வதி கிருஷ்ணனும் ஸ்தாபனகாங்கிரஸ் வேட்பாளர் திரு. லக்ஷ்மணனும் மாறி மாறி முன்னணியில் இருப்பதாகச் செய்திகள் கூறின.

கோயம்புத்தூர் மேற்கு சட்டசபைத் தொகுதியில் வாக்குகள் மறுஎண்ணிக்கை செய்யப்பட்டதால் முடிவு வெளியாவதில் தாமதம் ஏற்பட்டது.

பாண்டிச்சேரி லோக்சபா தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் திரு. வெங்கடபிரசாதரெட்டியார் அண்ணா தி.மு.க. வேட்பாளரைவிட ... வாக்குகளால் முன்னணியில் உள்ளார்.

## "காங்கேசன் தேர்தலுக்கு இது முதற்படி" — தியாகராசா

வட்டுக்கோட்டை எம். பி. திரு தியாகராசா இதுபற்றிக் கூறியதாவது:

"ஆட்சியாக ஏற்பட்ட பின்னர் தமிழ்ப் பகுதியில் நடைபெற்ற முதலாவது தேர்தல் இதுவாகும். இதில் முதலாளி வர்க்கமும், முதலாளி வர்க்கமும் மோதிக்கொண்டு ஒரு முதலாளி வர்க்கம் ஒருவிலை வார்த்தைகளால் மற்றைய முதலாளி வர்க்கத்தைத் தோற்கடித்துள்ளது. ஸ்ரீ லங்காசுதந்திரக்கட்சி இத்தேர்தலில் ஒருவரையும் அபேட்சகராக நிறுத்தாததால் அதுவே உண்மையான தமிழரின் தேசக்கட்சி என்பதை இத்தேர்தல் உறுதிப்படுத்துகிறது.

இத்தேர்தலில் தமிழரசுக்கட்சியை ஆதரித்து இ. தொ. கா. தலைவர் திரு. தொண்டமானும் பிரசாரம் செய்தார். அவரது பிரசாரத்தை மன்னாரிலுள்ள இ. தொ. கா. ஆதரவாளர்கள் செவிமடுக்கவில்லை. அண்மையில் இலங்கை-இந்திய பிரதமர்களுக்கிடையில் கச்சதீவு தொழிலாளரின் பிரச்னை சம்பந்தமாக ஏற்பட்ட உடன்பாடு திரு. தொண்டமானுக்குத் தோல்வியைக் கொடுத்துவிட்டதே இதற்குக் காரணம். இவர்கள் போன்றோர் இனி அரசியல் நடத்துவது கஷ்டமாகிவிட்டது.

மன்னார் தேர்தல் முடிவு காங்கேசன்துறைத் தேர்தலுக்கு முதற்படி என்பது எனது கருத்து."

## காங்கிரஸ் தலைவர் அமோக வெற்றி

நெட்டப்பாக்கம் தொகுதியில் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் வெங்கட சுப்பா ரெட்டியார் அமோக வெற்றி பெற்றுள்ளார். இவர் முன்னைநாள் முதலமைச்சர்.

ராஜ்பவன் தொகுதியில் வெற்றிபெற்றுள்ள திரு. தனகாந்தராஜ் முன்னாள் எதிர்க்கட்சித் துணைத்தலைவராவார். இவரிடம் இப்போதைய சட்டசபை சபாநாயகர் தோல்வியுற்றார்.

காரைக்கால் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள திரு. காந்தி ஓர் முன்னாள் மேயர். கடந்த இருதேர்தல்களிலும் இவர் இத்தொகுதியில் வெற்றி பெற்றார்.

இத்தேர்தலில் போட்டியிட்ட இருபெண்களும் தோல்வியுற்றுள்ளனர்.

உலகெங்குமிருந்து புத்தகங்கள்!

மிதக்கும் புத்தகக் கண்காட்சியில் இருந்து புத்தகங்கள்

வோகஸ்

இப்போது யாழ் நகரில்

யாழ் பொது நூல்நிலையத்தின் 2வது மாடியில்

பெப்ரவரி 27 — மார்ச் 5, 1974

| | | | | |
|---|---|---|---|---|
| சனி மு.ப. | 10-00 | பி.ப. | 1-00 |
| பி. ப. | 4-00 | இரவு | 8-00 |
| ஞாயிறு பி.ப. | 4-00 | இரவு | 8-00 |

பிரவேசச்சீட்டுகள் ரூபா. 1/- விதம் வாசலில் உண்டு. புத்தகம் வாங்கும்போது இப்பணம் திருப்பித் தரப்படும்.

என்றுமே மறக்கமுடியாத இனியதோர் அனுபவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

### கல்வி

ஜி. சி. ஈ. 1974 ஆங்கில இலக்கியம். இலக்கணம் (Essays. English Poems. Macbeth. English Prose) ஆங்கிலப் பேச்சு (Spoken English) வீடுகளில் வந்து கற்றுக் கொடுக்கப்படும். இங்கிலிஷ் மோனைக் யூனிற். விளக்கம் இல: 164 'ஈழநாடு' மேற்பார்த்து. யாழ்ப்பாணம். 164

ஒரே முறையில் விசேஷ சித்தி! கொக்குவில், வேதக்கோவில் ஒழுங்கை "இங்கிலிஷ் கியூரதி" இல் க. பொ. த. சாதாரணதர பரீட்சைக்கு ஆங்கிலம் இலவசமாக கற்பிக்கப்படும். 969

### வகுப்புக்கள்

தராதரமுள்ள தகுதி வாய்ந்த சிங்கள ஆசிரியரால் உத்தியோகத்திற்குத் தேவையான சிங்கள வகுப்புகள் மாணவருக்கு வசதியான நேரங்களில் நடாத்தப்படுகின்றன. பிராஜ்மல் என்ரப்பிறைசஸ். கைலாயமுத்து மாளிகை, 213/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 954

### வைத்தியம்

ஹோமியோபதி டாக்டர் களாக இன்றே முழுநேர, ஒவ்வொரு நேர நேர்முக வகுப்புகளில் சேருங்கள். அதிபர், வட இலங்கை ஹோமியோபதி கல்லூரி, 74, இலவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 919

### விற்பனைக்கு

கருவாடு தோல் வகைகள் தயாரிப்பவர்களுக்கு ஏற்ற வகையில் அரைத்த உப்பு எங்களிடம் கிடைக்கும். முகவரி இறைன்டிங் மில்ஸ், வாளிக்கிணற்று ஒழுங்கை கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 611. 992

B. S. A. 3·5 E N 8000 தொடர் விற்பனைக்கு உண்டு. ஸ்ருடியோ சற்குணம், மெயின் வீதி, யாழ்ப்பாணம். 8

நீர் இறைக்கும் யந்திரம் ஒறிஜினல் ஈசி மைறம் மார்க் 12, பம்பு. ஆனந்தன் இல்லம், வல்வெட்டித்துறை. 7

### தேவை

கச்சான் அல்வா தயாரிப்பதில் அனுபவம் வாய்ந்த ஆண் பெண் இருபாலாரும் தேவை. விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் தொடர்பு கொள்ளவும். க. நவரத்தினம், ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ், சுதுமலைச் சந்தி, மானிப்பாய். 6

## அடைவு நகை ஏலவிற்பனை

நிவித்திகல 5-ம் நிர் கடையில் அடைவு பிடிக்கும் சிவம் ஸ்ரோர் சொந்தக்காரரிடம் 1-1-72 முதல் 31-1-73 வரை அடைவு வைத்து மீட்கப்படாத தங்க நகைகள் யாவும் 1974-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ந் திகதி காலை 9 மணி தொடக்கம் அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தார்,
எஸ். கணேசன்.
642

# "வடக்கின் ஆசிரியர் பற்றுக்குறை நீங்கும்"

(சாவிட்டபுரம், செவ்வாய்)

"1972ம் ஆண்டில் 6ம் வகுப்பிலும், 3ம் ஆண்டு முதலாம் வகுப்பிலும் புகுத்தப்பட்ட புதிய கல்வித்திட்டம் 74ம் ஆண்டாகிய இவ்வாண்டு 9ம் வகுப்பில் புகுத்தப்பட உள்ளது. இப்புதிய கல்வித்திட்டம் வெற்றிபெற ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர் யாவரும் ஒத்துழைக்க முன்வரல் வேண்டும்".

இவ்வாறு வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட புதிய முதலாம் வகுப்பறையை திறந்து வைத்து உரையாற்றிய யாழ். மாவட்ட கல்வியதிகாரி திரு. எஸ். இராஜா கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. எம். திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சம்பிரதாயபூர்வமாக வகுப்பறையைத் திறந்து வைத்தபின் உரையாற்றுகையில் திரு. ராஜா மேலும் கூறியதாவது:-

### ஆசிரியர் பற்றுக்குறை

இன்று வடபகுதியில் ஆசிரியர் பற்றுக்குறை இருந்துவருகிறது. இதைத்தீர்க்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். விரைவில் இவ்வாசிரியர் பற்றுக்குறை நிவர்த்திசெய்யப்படும்.

இன்று பாடசாலைகளில் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வசதிக்கட்டணப் பணம் கல்வி அபிவிருத்திக்கே செலவளிக்கப்படும். பாடசாலைக்குத் தேவையான விஞ்ஞான உபகரணங்கள் போன்றவற்றை இப்பணத்தில் வாங்கலாம். கல்விப் பகுதியும் தேவையான பொருட்களை வழங்கும். இவற்றையெல்லாம் நன்கு பயன்படுத்த மாணவர்கள் முன்வரவேண்டும்"

வட்டார வித்தியாதரிசி திரு. சி. தியாகராஜா பேசுகையில், அரசாங்கம் வெளிநாடுகளிலுள்ள கல்வி முறைகளையெல்லாம் ஆராய்ந்து உருவாக்கிய புதிய கல்வித்திட்டம் மாணவர்கள் சுயமுயற்சியாக் தமது ஆற்றலுக்கேற்றவாறு கல்வியைப் பயில உதவுகிறதென்றார். தமது ஆற்றலைப் பயன்படுத்தி மாணவர்கள் இப்புதிய கல்வித்திட்டத்தின் பயனை முழுதாக அனுபவிக்க முன்வரல் வேண்டும்' என்றும் அவர் கூறினார்.

பண்டிதர் இ. நமசிவாயம் பேசுகையில், இக்குறைபுதிய கல்வித்திட்டத்திற்கிணங்க கல்விபயிலும் மாணவர்களுக்கு பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டியுள்ளதென்றும் இவ்வசதிகளை அரசாங்கமே ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என நினைக்கக்கூடாதென்றும் கூறினார். மற்றும் பலரும் உரையாற்றினர்.

## கோரிக்கை

பண்டிருப்பு, செவ்வாய்

காரைதீவுக் கிராமாட்சி மன்றம், சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த நூல் நிலையத்தின் ஓர் அங்கமாக சிறுவர்களுக்கென ஒரு நூல்நிலையத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது. விரைவில் செயல்படவுள்ள இந்த நூலகத்துக்கு சிறுவர்க்கான அறிவுவளர்ச்சி நூல்களை அன்பளிப்புச் செய்யுமாறு காரைதீவு கிராம சபைத்தலைவர் திரு. பரசுராமன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மடுமாதாவின் சுற்றுலா

மீசாலை, செவ்.

மடுமாதாவின் திருச்சொரூபம் வவுனியா, அனுராதபுரம், மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள ஆலயங்களுக்கு மார்ச் 16-ந் திகதிமுதல் ஏப்ரல் 5-ந் திகதிக்கிடையிலும் யாழ். மறை மாவட்ட ஆலயங்களுக்கு மே 6-ந் திகதி முதல் ஜூன் 10-ந் திகதிக்கிடையிலும் எடுத்துச்செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## பாடசாலைகள் கிரிக்கெட் போட்டி:

# பத்து விக்கெட்டுகளால் கொக்குவில் வெற்றி

(யாழ்ப்பாணம், புதன்)

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், கொக்குவில் இந்து பத்து அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

யூனியன் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 104 ஓட்டங்களைப் பெற்றது. ஜி. இளங்கோவன் 21 ஓட்டங்களைப் பெற்றார். ரி. சந்திரக்குமார் 47 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், பி. சந்திரநாதன் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் பெற்றனர். யூனியன் கல்லூரி 2-வது இன்னிங்ஸில் 85 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பி. ஜோகச்சந்திரன் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களைப் பெற்றார். என். றவிச்சந்திரன் 17 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், என். ... குமார் 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

கொக்குவில் இந்துக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 164 ஓட்டங்களைப் பெற்றது. பி. சத்தியநாதன் 41 ஓட்டங்களையும், எஸ். குமரப்பனம் 25 ஓட்டங்களையும் பெற்றனர். எஸ். சந்திரநாதன் 71 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளைக் கைப்பெற்றினார். 2-வது இன்னிங்ஸில் கொக்குவில் இந்து விக்கெட்டுகள் நஷ்டமின்றி 26 ஓட்டங்களைப் பெற்றது. எஸ். குலரட்ணம் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களைப் பெற்றார்.

இப்போட்டி யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (தே. நி.)

# பற்றிக்ஸ் — ஹாட்லி வெற்றி தோல்வி இல்லை

(யாழ்ப்பாணம், புதன்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டி எத்தரப்பினருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

சென். பற்றிக்ஸ் முதல் இன்னிங்ஸில் மொத்தம் 147 ஓட்டங்களைப் பெற்றது. ஏ. அனஸ்லின் 37 ஓட்டங்களையும் ஈ. டி. கருணாகரன் 25 ஓட்டங்களையும், ஏ. எஸ். றெஜி ரேல் 21 ஓட்டங்களையும் பெற்றனர். எம். ஜோகேந்திரக்குமார் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், என். பிரேமராஜா, என். சிவராசா, எஸ். தெய்வேந்திரன் ஆகியோரும் முறையே இரண்டு விக்கெட்டுகளைப் பெற்றனர்.

சென். பற்றிக்ஸ் 2-வது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுகளை நஷ்டத்துக்கு 80 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. ஏ. ஜி. சின்னையா ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும், ஈ. டி. கருணாகரன் 19 ஓட்டங்களையும் பெற்றனர். என். சிவராஜா 11 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளைக் கைப்பெற்றினார்.

ஹாட்லிக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 93 ஓட்டங்களைப் பெற்றது. எஸ். மகாலிங்கம் 37 ஓட்டங்களையும், ஏ. ஜி. சின்னையா 9 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், ஏ. அருள்குமார் 25 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் பெற்றனர். 2-வது இன்னிங்ஸில் ஹாட்லிக் கல்லூரி ஆட்டம் முடிவடையும் போது 4 விக்கெட்டுகளை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது. எஸ். தங்கவேல் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும், ஏ. ஜி. சின்னையா 41 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் பெற்றனர்.

இப்போட்டி ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (தே. நி.)

# ஜப்பானில் விலைவாசிகளின் ஏற்றம்

டோக்கியோ, பெப். 26

கடந்தபெப்ரவரியில் இருந்து ஒரு வருட காலத்திற்குள் ஜப்பானில் மொத்த விற்பனை விலைகள் சுமார் 31 சத விகிதம் அதிகரித்துள்ளது. நிச்சோன் ஜின்கோ வங்கி அறிக்கைப்படி கடந்த 20 வருட காலத்தில் ஜப்பானில் இதுவே மிகதுரிதமான விலை வளர்ச்சி விகிதமாகும்.

மொத்த சரக்குவிலை அதிகரிப்பு யாவனை பொருட்களின் விலையை ஒரு வருட காலத்தில் 20—25 சத விகிதம் உயர்த்திவிட்டது.

சுமார் ஒரு கோடி தொழிலாளர்களைக்கொண்ட 4 பிரதான தொழிற்சங்க கேந்திரங்கள் பிரதமர் தனகாவை சந்தித்து விலைவாசிகள் உயர்வையும் பணவீக்கத்தையும் தடுக்கும்படி கோரினர்.

அடுத்த சில மாதங்களின் சம்பள உயர்வுகோரி வேலைநிறுத்தம் நடத்தப்போவதாகவும் கூறின. இதையிட்டு மார்ச் 1ம் திகதி பொதுவேலைநிறுத்தம் நடத்தப்பட இருக்கிறது.

## ஜேர்மனியிலும்

பொன், பெப். 26

மேற்கு ஜெர்மனியில் கடந்த ஒரு வருட காலத்தில் மொத்த சரக்கு விலை 10 சத விகிதம் அதிகரித்துள்ளது.

அவுஸ்திரேலியா புள்ளிவிபர இலாக்கா தகவலின்படி உணவுப் பொருட்களின் விலை 25 சத விகிதம் உயர்ந்துவிட்டது.

அவுஸ்திரேலியா பத்திரிகைச் செய்திகளின்படி நாட்டில் 13.2 சத விகிதம் பணவீக்கம் ஏற்பட்டுள்ளது.

அதிகரிக்கும் விலைகளை எதிர்த்து மெல்போர்ணில் நடந்த ஆர்ப்பாட்டம் ஒன்றில் வரிச்சுமையை குறைக்கும்படியும், பெரும் கம்பனிகளை தேசியமயமாக்கும்படியும் பணவீக்கத்தை குறைக்கும்படியும் விலை ஏற்றத்தை குறைக்கும்படியும் கோரப்பட்டது.

# முதன்மையான சேமப்படை அலுவலகம்'

(யாழ்ப்பாணம், புதன்)

'இலங்கையிலுள்ள பொலிஸ் சேமப்படைக் காரியாலயங்கள் அனைத்திலும் பார்க்க யாழ். நகரில் தற்போது நிறுவப்பட்டிருக்கும் இப் புதிய கட்டிடமே முன்னணி வகிக்கின்றது. பல நவீன சதிகள் அடங்கிய இக்காரியாலயத்தை நான் திறந்து வைப்பதில் மிகவும் பெருமைப்படுகின்றேன்'

இவ்வாறு கடந்த சனிக்கிழமை காலை யாழ். பொலிஸ் நிலைய புதியக் கட்டிடத்தில் பொலிஸ் சேமப்படைக் காரியாலயத்தை சம்பிரதாயப்படி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்த இலங்கை சேமப்படைத் தலைவர் திரு. ஏ. ஜே. ராஜசூரியா தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் யாழ். மாவட்டப் பொலிஸ் அதிபர் திரு. ஆரியசிங்கா, மற்றும் பொலிஸ் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

அன்றுமாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில், இலங்கை சேமப்படை பொலிஸ் ஹெ. வி. சி. பான்ட் வாத்திய இசையும், யூடோ, கராட்டி போன்ற சாகச விளையாட்டுகளும், உள்ளூர் பொப் இசைகளும் திரு. ராஜசூரியா தலைமையில் நடைபெற்றது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். மாவட்ட சேமப்படை பொலிஸ் உதவி சுப்பிரின்டென் திரு. வி. ரி. இலிங்கம் செய்திருந்தார். (தே. நி.)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## பாண்டிச்சேரியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

... தொகுதியில் அண்ணா தி. மு. கழகத்தைச் சேர்ந்த திரு. பாக்கியம் வெற்றி பெற்றுள்ளார்.

பள்ளூர் தொகுதியில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வி. என். புருஷோத்தமன் வெற்றிபெற்றுள்ளார்.

ஏனம் தொகுதியில் தி. மு. க. ஆதரவுபெற்றசுயேச்சை வேட்பாளர் திரு. சாமிச் செட்டி வெற்றிபெற்றார்.

முதலியார் பேட்டை தொகுதியில் ஸ்தாபன காங்கிரஸ்கட்சியைச்சேர்ந்த சபாபதி ... கோதண்டராமன் வெற்றிபெற்றுள்ளார்.

அரியாங்குப்பம் தொகுதியில் காங்கிரஸ்கட்சியைச் சேர்ந்த புருஷோத்தமரெட்டியார் தெரிவுசெய்யப்பட்டார்.

உப்பளம் தொகுதியில் அண்ணா தி. மு. க. வேட்பாளர் திரு. சி. எம். பார்த்தசாரதி வெற்றியீட்டினார்.

திருபவன் தொகுதியில் காங்கிரஸ்கட்சியைச் சேர்ந்த எஸ் கோபால் தெரிவுசெய்யப்பட்டார்.

உருளையன்பேட்டையில் அ. தி. மு. க. வேட்பாளர் மணிமாறன் வெற்றிபெற்றார்.

ஏர்லன்பேட்டை, திறைவிரோன்டெல்லி, காரைக்கால் தெற்கு ஆகிய தொகுதிகளிலும் அ. தி. மு. க. வெற்றி பெற்றுள்ளது.

(கிளிநொச்சி, செவ்வாய்)

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் க. பொ. த. (உயர்தர) விஞ்ஞான பாட வகுப்பு நடாத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

போன் 410 ஸ்தாபிதம்: 1939
போட்டோ ஸ்ரற் (PHOTO STAT)
புளூ பிறின்ற் (BLUE PRINT)
5 நிமிடத்தில் பெற்றுக்கொள்ள
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் கீஸிங்கர்; இன்று இஸ்ரேல் செல்கிறார்

(லண்டன், பெப். 26)

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் டாக்டர் கீஸிங்கர் லண்டன் வந்துள்ளார்.

பிரிட்டிஷ் பிரதமர் ஹீத்துடனும் வெளிவிவகார அமைச்சர் சேர் அலக்டக்ளஸ் ஹியூமுடனும் டாக்டர் கீஸிங்கர் பேச்சுவார்த்தை நடாத்தவிருக்கிறார். எண்ணெய் நெருக்கடி பற்றியும் அவர் பிரிட்டிஷ் தலைவர்களுடன் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

லண்டனிலிருந்து டாக்டர் கீஸிங்கர் மூன்றாவது தடவையாக மேற்காசியா செல்கிறார்.

சிரியா, இஸ்ரேல், எகிப்து ஆகிய நாடுகளுக்குச் செல்லும் டாக்டர் கீஸிங்கர் சிரியாவின் கோலான் குன்றுப்பகுதியில் இஸ்ரேலிய சிரியாப் படைகளை விலகிக்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடவிருக்கிறார்.

நாளை இஸ்ரேல் போய்ச் சேரவிருக்கும் டாக்டர் கீஸிங்கரைச் சந்தித்துப் பேசப் போவதில்லையென்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் மோஷே தயான் அறிவித்துள்ளார்.

மேற்காசியாவில் சில நாட்களைக் கழித்து அடுத்த வாரம் வாஷிங்டன் திரும்பும்போது ஜோர்டானுக்கும் சவூதி அரேபியாவுக்கும் செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சூயஸ்கால்வாயை மீண்டும் திறக்கச் செய்வதில் சோவியத் யூனியனும் டாக்டர் கீஸிங்கரும் அக்கறைகொண்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

டாக்டர் கீஸிங்கரின் மேற்காசிய விஜயம்பற்றி அதிபர் நிக்ஸன் நிருபர்கள் மகாநாட்டில் குறிப்பிடுகையில் கீஸிங்கரின் விஜயம் அமெரிக்காவுக்கெதிரான எண்ணெய்த் தடையை நீக்குமென எதிர்பார்ப்பதாக நம்பிக்கை தெரிவித்தார்.

## பிரிட்டிஷ் அரசுக்கு மற்றுமொரு கண்டம்

(லண்டன், பெப். 26)

சென்ற மாதம் பிரிட்டனின் வர்த்தகத்தில் கொடிய கணக்கான ஸ்டேர்லிங் பவுண் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

எண்ணெய்யாளர்களுள் தம் பொருள் அதிகரித்த தொழிலாளரின் வேலைநிறுத்தம் இதன் விளைவாக மேற்கொள்ளப்பட்ட வேலை நாட்குறைப்பு ஆகியவையே வர்த்தகத்தில் நஷ்டம் ஏற்படக் காரணமென்று கூறப்படுகிறது.

நாளை நடைபெறவிருக்கும் பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் இந்த நஷ்டத்தை தொழிற்கட்சியும் லிபரல்கட்சியும் ஹீத்தின் கன்ஸர்வேட்டிவ் அரசாங்கத்துக்கெதிரான பிரசாரமாகப் பயன்படுத்துகின்றன.

## வட இந்திய நகர்களில் வன்முறைச்செயல்கள்

(அகமதாபாத், பெப். 26)

குஜராத்தில் நேற்று சில இடங்களில் மீண்டும் வன்முறைச் செயல்கள் இடம்பெற்றன. நிலைமையைச் சமாளிப்பதற்காக பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் மூவர் காயமடைந்தனர். கல்வீச்சுச் சம்பவத்தில் பொலிசார் உட்பட பதினொருபேர் காயமடைந்தனர்.

பரோடாவில் பத்தொன்பது மணிநேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தும் கொள்ளை, கல்வீச்சு ஆகிய வன்முறைச் செயல்கள் நடைபெற்றன.

அகமதாபாத்தில் ஒரு கடையைக் கொள்ளையடிக்க முயன்ற ஒரு கும்பலைக் கலைப்பதற்கும் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

மத்தியப் பிரதேசத்தில் வன்முறைச் செயல்களைத் தடுக்கும் பொருட்டு இன்று மாலை வரை 24 மணிநேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஜபல்பூருக்குச் சமீபத்தில் மாணவர் கோஷ்டிக்கும் மற்றொரு கோஷ்டிக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பில் ஒரு நீதவான், பொலிசாருட்பட 60 பேருக்கு மேல் காயமடைந்தனர்.

## ஏப். 9ல் ஐ. நா. விசேஷ கூட்டம்

(நியூயோர்க், பெப். 26)

ஐ. நா. மகாசபையின் விசேஷ கூட்டம் ஏப்ரல் மாதம் 9-ந் திகதி நடைபெறவிருக்கிறது. இக்கூட்டம் பற்றிய அறிவித்தல் 135 அங்கத்துவநாடுகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

உலகநாடுகளில் உற்பத்திக்கு மூலப்பொருள் தட்டுப்பாடு பற்றியும் எண்ணெய் எரிபொருள் நெருக்கடி பற்றியும் விசேஷ கூட்டம் ஆராயவிருக்கிறது.

## நிக்ஸன் எச்சரிக்கை

(வாஷிங்டன், பெப் 26)

அமெரிக்காவுக்கெதிராக எண்ணெய் உற்பத்தி செய்யும் அரபு நாடுகள் தொடர்ந்து எண்ணெய்த் தடையை நீடித்தால் அது மேற்காசியாவின் அமைதி வேற்படுத்தும் அமெரிக்காவின் முயற்சியைத் தாமதப்படுத்தும் என்று அமெரிக்க அதிபர் நிக்ஸன் எச்சரித்தார்.

அமெரிக்காவில் எண்ணெய்ப் பங்கீட்டு முறையைக் கொண்டுவர வேண்டிய அவசியமில்லையென்றும் நிக்ஸன் சொன்னார்.

செல்லுபடியாகாத

# ஒரு லட்சம் ரூபா நோட்டுகள் சிக்கின

கொழும்பு, செவ்.

ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுள்ள செல்லுபடியாகாத நோட்டுக்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

உடவளவையில் உள்ள குடிசையொன்றிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ள இந்த நோட்டுக்கள் தொடர்பாக இருவரையும் பொலிஸர் கைதுசெய்தனர்.

அண்மையில் கொழும்பு மத்திய வங்கியினால் செல்லுபடியாகாதெனப் பிரகடனப்படுத்தப்பட்ட 5, 10 ரூபா நோட்டுக்கள் உடவளவைப் பகுதியில் பாவனையிலிருந்துவருவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட புலன்விசாரணையை அடுத்து இந்த நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டன.

செல்லுபடியாகும் 5, 10 ரூபா நோட்டுக்களைவிட அதிக வித்தியாசம் காணமுடியாத இந்தச் செல்லுபடியாகாத நோட்டுக்களில் இடப்பட்டிருந்த சிறிய துளைகள் வேறு கடுதாசியினால் ஒட்டப்பட்டிருந்ததையும் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

கடந்த வருடம் மத்திய வங்கியினால் செல்லுபடியாகாதெனப் பிரகடனப்படுத்தப்பட்ட 5, 10 ரூபா நோட்டுக்கள் மத்திய வங்கியிலிருந்து காணாமற்போயிருந்தது. இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுவந்தன.

இதே வேளையில், இந்த செல்லுபடியாகாத நோட்டுக்களில் சில ஜா எலயில் உள்ள வீடொன்றில் வைக்கப்பட்டிருந்ததையும் பொலிசார் கண்டுபிடித்தனர்.

இதுதொடர்பாக விரைவில் பலர் கைதுசெய்யப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இத்தாலி - லிபியா ஒப்பந்தம்

(ரோம், பெப். 26)

இத்தாலியும் லிபியாவும் செய்துகொண்டுள்ள புதிய ஒப்பந்தமொன்றின்படி லிபியாவிடமிருந்து இத்தாலி கச்சாய் எண்ணெய் வாங்க விரும்புகிறது. இத்தாலிக்கு விஜயம் செய்துள்ள லிபியப் பிரதமர் ரோமில் வைத்து இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

# கோழித்திருட்டு: 2 பேருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

[மாவிட்டபுரம், செவ்.]

கோழித் திருட்டில் ஈடுபட்ட இரு நபர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதால் அவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட மூன்றுமாதக் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த எஸ். நாகமுத்துவுக்கு சொந்தமான 15 கோழிகளைத் திருடியதாக கே. மகாதேவன், எஸ். கணேசமூர்த்தி ஆகியோர் மீது குற்றம் சுமத்தி சுன்னாகம் பொலிசார் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் தொடர்ந்திருந்த வழக்கு நீதிபதி திரு. டி. யோகரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அச்சமயம் இருவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர். நீதிபதி இருவருக்கும் மூன்றுமாதகால ஒத்திவைக்கப்பட்ட கடூழியச் சிறைத் தண்டனைவிதித்து, 5 வருட நன்னடத்தைப் பிணையில் செல்லுமாறும், அந்த ஐந்து வருடத்திற்குள் ஏதாவது குற்றச் செயலில் ஈடுபட்டால் மேற்படி சிறையை அனுபவிக்க வேண்டிவரும் எனவும் குற்றம்செய்யாத பட்சத்தில் சிறை வாபஸ்பெறப்படுமெனவும் தெரிவித்தார்.

0 0 0

## சுருட்டுக்கடையில் வேலைசெய்ய விரும்பாதவரின் பரிதாப முடிவு

(யாழ்ப்பாணம், புதன்)

சுருட்டுக்கடையில் வேலை செய்ய விரும்பாத வாலிபர் ஒருவர் இரு நாட்கள் தொடர்ச்சியாக மதுபானம் அருந்தி பின் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த வெற்றிவேலு வசந்தரூபன் என்பவரின் மரணவிசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு வி. நடராசா மரணவிசாரணை நடத்தினார்.

அம்பலவாணர்சோலை சுருட்டுக்கடையில் வேலை பார்த்துப் பின் 22-ந் திகதி வீட்டுக்கு வந்தாரென்றும், திரும்பிச் செல்லாமல் மதுபானம் அருந்தி வந்தாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## பஸ் கல்வீச்சுச் சம்பவம்: வழக்குத் தொடர அவகாசம்

மாவிட்டபுரம், செவ்.

உரும்பிராய் பஸ் கல் வீச்சுக் குறித்து சந்தேகத்தின் பேரில் கைதான நபர்கள் மீது வழக்குத் தொடரப் பொலிசாருக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

உரும்பிராய்ச் சந்தியில் வைத்து இ. போ. ச. பஸ் ஒன்றுக்குக் கல்வீசப்பட்டதாக சுன்னாகம் பொலிசார் சந்தேகத்தின் பேரில் எஸ். விஜேபா, தி. ஜெயக்குமார், எஸ். அற்புதானந்தன், இ. சரவணபவன் ஆகியோரை கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம் அவர்களை நீதிபதி தலா 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்திருந்தார்.

இவ்வழக்கை விசாரணைசெய்வதற்காக மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட சமயம் சுன்னாகம் பொலிஸ் அதிபர் திரு. எம். 3வரத்தினம் இவர்கள் மீது இன்னும் வழக்குத் தொடரப்படவில்லையென்றும் விசாரணை பூரணமாக முடிந்து வழக்கைத் தொடர அவகாசம் தருமாறும் கோரியதையடுத்து நீதிபதி அடுத்த மாதம் 5-ந் திகதிவரை அவகாசம் வழங்கினார்.

## அச்சுவேலி இணக்கசபை

(புத்தூர், செவ்வாய்)

அச்சுவேலிப் பகுதிக்கு இணக்கசபை நியமிக்கப்பட்டுள்ளது. அதன் தலைவராக திரு. சி. முத்துச்சாமி நியமிக்கப்பட்டுள்ளார். உறுப்பினர் விபரம் வருமாறு:

திருவாளர்கள்: இ. கிருஷ்ணபிள்ளை, தா. சிவலிங்கம், சி. ஏரம்பு, க. குழந்தைவேலு, வ. செல்லத்துரை, அ. அருமைநாயகம், எஸ். கே. சின்னத்தம்பி, ஏ. சிதம்பரப்பிள்ளை, வே. கந்தசாமி, கு. குமாரகுலசிங்கம், எஸ். சபாரத்தினம், பொ வன்னியசிங்கம், நா. செல்லநாயகம், இ. சிவபாதம், வ. சிவம் கணபதிப்பிள்ளை, சி. செல்லப்பு, க. சின்னத்தம்பி, சி. குமாரசாமி, ப வெற்றிவேலு, வே. சிதம்பரப்பிள்ளை, க. செல்வரத்தினம், செ. சிவபாதசுந்தரம், எஸ். வி வேலுப்பிள்ளை, சி. காசிப்பிள்ளை, சீ. குணரத்தினம், பொ. சிவலிங்கம், மு. ஆறுமுகசாமி, எஸ். நகுலேந்திரன்.

## ஆயுதப் படைகள் மாற்றம்

(அம்மான், பெப். 26)

ஜோர்டான் ஆயுதப் படைகளின் தலைமைப் பீடங்களில் பெரும் மாற்றத்தை மன்னர் ஹுசெயின் செய்துள்ளார்.

# ஐக்கியத்திற்கு உழைக்க 'பங்ளா'வுக்கு கோரிக்கை

(டாக்கா, பெப். 26)

பங்ளாதேஷ் கடந்தகாலத்தை மறந்து முஸ்லிம் ஐக்கியத்துக்காக புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று எகிப்திய அதிபர் அன்வர் சதாத் கேட்டுக் கொண்டார். இஸ்லாமிய மகாநாட்டில் கலந்துகொண்டபின் பங்ளாதேஷுக்கு விஜயம் செய்த அதிபர் சதாத் டாக்காவில் இரண்டு மணிநேரம் தங்கியிருந்தார்.

பங்ளாதேஷ் பிரதமர் ஷேக் முஜிபுர் ரஹ்மானுடன் அதிபர் சதாத் நண்பகல் உணவருந்தினார்.

இரு தலைவர்களும் பல விஷயங்கள்பற்றியும் பேசியதாகவும் பங்ளாதேஷில் விசாரணை செய்யப்படவிருக்கும் 195 பாகிஸ்தான் போர்க் கைதிகளின் விதிபற்றியும் அதிபர் சதாத் பேசியதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7 பேர் மரண விசாரணையின் தீர்ப்பு:

# "அபாயத்தை ஏற்படுத்துவதற்காக துப்பாக்கியால் சுட்டிருப்பார்களா?

# மின்கம்பி அறுப்பது தற்கொலைக்கு ஒப்பான காரியமில்லையா?

## ஆலோசனைக்குரிய விடயம் இது" - நீதிபதி பாலகிட்ணர் கருத்து

[தமிழாராய்ச்சி மகாநாட்டு இறுதிநாள் சம்பத்தின்போது பலியான 7 பேரின் மரணம் குறித்து நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் நடாத்திய மரணவிசாரணையின் தீர்ப்பில் நீதிபதியவர் வெளியிடப்பட்ட தீர்ப்பு விபரத்தில் நேற்றைய தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது. நாளை முடியும்]

சட்டத்தரணி ராஜரத்தினம் மூகமூடியணிந்த பொலிஸ்காரர் ஒருவர் சுடுவதையும், ஒலிபெருக்கியையரை அறச்செய்வதையும், அது தரைக்கு முன்னால் விழுந்ததையும் கண்டதாகக் கூறினர். இரும்புவேலிக்கு கணிசமான அளவு தூரத்தில் இந்தச் சாட்சி நின்றிருக்கிறார். வீரசிங்கம் மண்டபத்தில் மேற்குவாயில் 'கேற்' அருகில் இவர் இருந்திருக்கிறார். பின் ஒரு கட்டத்தில் மாநகரசபைவான் ஒன்று வேலிக்கு அருகில் நின்றதாக இலிங்கநாதன் என்ற சாட்சி கூறினர். அங்கே ஒரு ஏணியும் அதன் மீது ஒரு ஆளும் நின்றதாக அவர் கூறினர். கம்பிகளில் மின்சாரம் பாய்வதாக எச்சரிக்கப்பட்டதால் தாம் ஏணியின் அருகே செல்லவில்லை என்று அவர் சொன்னர். மாநகரசபை மின்சார சுப்பிரின்டென் சிவகடாட்சம்பிள்ளை திரு. ராஜசூரியர் தகவல் கொடுத்ததை பேரில் 'லைன்ஸ்மன்' வேலுப்பிள்ளை மற்றும் இரு தொழிலாளர்களுடன் இரவு 11-30 மணிக்கு ஸ்தலத்துக்கு விரைந்ததாகக் கூறினர். சாட்சியான 'லைன்மன்' வேலுப்பிள்ளை மற்றும் தொழிலாளர்களுடன் இரவு 11-30 மணிக்கு ஸ்தலத்துக்கு விரைந்ததாகக் கூறினர். ராட்சியான "லைன்ஸ்மன்" வேலுப்பிள்ளை மின்சார சுப்பிரின்டனுடன் குப்பை ஏற்றும் லொறியில் ஸ்தலத்துக்குச் சென்றதாகச் சொன்னர். மின்சார விளக்குகள் பொருத்தப்பட்ட உலோகக் கம்பம் சரிந்து விழுந்திருந்ததைக் கண்டதாக அவர் கூறினர். லொறியில் ஏணி இருந்தபோதிலும் ஏணி எதுவுமே பாவிக்கப்படவில்லை என்று அவர் மறுத்தார்.

### ராஜசூரியரின் தகவல்

இந்த விசாரணையில் மின்தாக்குதல் பற்றி குறிப்பிட்ட முதல் சாட்சியான திரு. ராஜசூரியர் கூட்டத்துக்குச் சென்றிருந்த தமது புதல்வர்களைத் தேடிக்கொண்டு அங்கே சென்றதாகச் சொன்னர். உலோகக் கம்பம் வேலியின் மீது சாய்ந்திருந்ததை அவர் பார்த்திருக்கிறர். அவர் அதில் மின்சார ஒழுக்கு இருந்ததை அறிந்து அதுபற்றி மின்சார நிலையத்துக்கு, அறிவித்துள்ளார். மின்சார சுப்பிரின்டன் சிவகடாட்சம்பிள்ளை மண்டபவளவைச் சோதனையிட்டதாகவும் மண்டப மின் இணைப்பில் மின் ஒழுக்கு இருக்கவில்லை என்பதை கண்டறிந்ததாகவும் சொன்னர்.

### 'ட்றிப் சுவிச்' இயங்கியது

மின்ஒழுக்கு இருந்திருந்தால் "ட்றிப் சுவிச்" இயங்கி அதனை நிறுத்தியிருக்கும். அந்தநேரத்தில் அவர் ஸ்தலத்துக்குச் சென்றபோது வேலியின் மீது பாய்ந்துகொண்டிருந்த மின்சாரத்திற்கு உயர்சக்தி கொண்டிருக்கவில்லை என்பதைக் கண்டிருக்கிறர். அங்கிருந்து பாய்ந்த மின்சாரம் மின்விபத்தை உடனடியாக ஏற்படுத்திருக்கமுடியாது. அன்றிரவு 11-30 மணிக்கு அவர் இதைத் கண்டுபிடித்தார்.

### மின்சக்தி அமைச்சின் உதவிச் செயலாளர் சாட்சியம்

நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சின் உதவிச்செயலாளர் திரு. ஜே. எம். போர்க்ரும் சாட்சியமளித்தார். அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவின் கோரிக்கையின்பேரில் 28-1-74-ம் திகதி ஸ்தலத்தில் பரிசோதனை நடத்தியதாகக் கூறினர். மின்தாக்குதல் எப்படி ஏற்பட்டது என்பதைத் தம்மால் உறுதியாகச் சொல்ல முடியாது என்று அவர் சொன்னர். பிழையாகப் பொருத்தப்பட்டிருந்த கம்பிகள் விழுந்ததில் மின்தாக்குதல் ஏற்பட்டிருக்கலாம் என்று அவர் யூகித்தார். தனிப்பட்ட மின் இயந்திரங்கள் பாவிக்கப்பட்டிருந்த போதிலும் அவைக்கான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை என்பதை அவர் மாநகரசபையாரிடமிருந்து அறிந்துள்ளார். திரு. பத்திநாதன் என்பவர் சாட்சியமளித்தபோது எரிந்த சாம்பல் தம்மீது விழுந்ததாகக் கூறினர். அது எரிந்த மின்கம்பி என்று அவர் கண்டறிந்தார். அவர் அப்போது கம்பிவேலிக்கு அருகில் இருந்துள்ளார். அவரது சாட்சியத்தின்படி ஒரு பொலிஸ் அதிகாரி பல துப்பாக்கிவேட்டுக்களை ஆகாயத்தை நோக்கிச் சுட்டார். ஒரு பொலிஸ் அதிகாரி குண்டுபோன்ற ஒரு பொருளை தம்மீது வீசியதாக அவர் கூறினர். அவருக்கு மின்தாக்குதல் ஏற்பட்டது; ஆனல் உயிர் தப்பிவிட்டார் அதிர்ச்சி, நோவினலும் கஷ்டப்பட்ட அவர் வெகுநாட்கள் ஆஸ்பத்திரியில் இருந்துள்ளார். அவரது நிலைபற்றி டாக்டர் விபரித்தார்.

### மின்கம்பி எப்படி அறுந்து விழுந்தது?

மின்கம்பிகள் பொலிஸ் துப்பாக்கி வேட்டினுல்தான் அறுந்து விழுந்தனவா என்பதே கேள்வி. திரு. ராஜரத்தினமும், திரு. பத்திநாதனும் இப்படி நடந்ததாகத் தெரிவிக்கிறார்கள். துப்பாக்கி வேட்டுச் சத்தத்தைக் கேட்டதாக டாக்டர் மகாதேவாவும் கூறியுள்ளார். வேட்டுச் சத்தம் மாத்திரம் கொண்டு, அது துப்பாக்கி வெடியா அல்லது கண்ணீர்ப்புகைக் குண்டு வெடியா என்பதைத் தீர்மானித்துச் சொல்ல முடியாது. அன்று மாலை ஒரு துப்பாக்கிக் குண்டுதன்னும் தீர்க்கப்படவில்லை என்று பொலிஸ் சுப்பிரின்டன் ஆரியசிங்கா உறுதியாகத் தெரிவித்துள்ளார். நான் அவரது சாட்சியத்தைத் தயக்கமின்றி ஏற்றுக்கொள்கிறேன். ஏனென்றால் சிறு விஷயமாக அவர் குறிப்பாக பரிசீலனை செய்திருக்கிறார்.

### தற்கொலைக்கு ஒப்பான காரியமல்லவா?

மின்சக்திபாயும் மின்கம்பிகளை அறுத்துத் தொங்கச் செய்வதன் மூலம் அபாயத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் அவைகள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்களா? அல்லது அவை தற்செயலாக அறுந்து விழுந்தனவா? என்பது ஆலோசனைக்குரிய விடயம். ஒவ்வொரு சாட்சியத்தின் படியும் பொலிசார் கூட்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஒதுக்கிநிற்கிறார்கள். அவர்களே அங்கு மிங்கும் நகர்ந்துகொண்டிருந்த அதே வேளையில் மின் கம்பிகளை அறச்செய்வதின் மூலம் தற்கொலைக்கு ஒப்பான முரட்டுத்தனமாக நடந்துகொண்டார்களா என்பது இங்கு எழும் பெரும் கேள்வியாகும். மரணம் உண்டாக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் நோக்கமாக இருந்திருந்தால், தமக்குங்கூட ஆபத்தை ஏற்படுத்திக்கொள்ளும் முறையில் அவர்கள் நடந்திருப்பார்கள் என்று நான் கருதவில்லை. மின்கம்பிகள் அறுந்து விழுந்திருக்குமேயாயின் அவை தற்செயலான சூழ்நிலையில்தான் நிகழ்ந்திருக்க வேண்டும் என்றதான் நான் முடிவுக்கு வருகிறேன். இந்த மரணவிசாரணையில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் பிரதானமாக டாக்டரின் சாட்சியத்தின் அடிப்படையில் இந்த மரணங்கள் தற்செயலாக ஏற்பட்ட மின்தாக்குதலால் நிகழ்ந்தவை என்று நான் முடிவுகட்டுகிறேன். வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னுல் உள்ள இரும்புவேலிக்கும் உலோகவிளக்குக்கம்பத்துக்கும் அருகில் ஒரு இடத்தில் அல்லது இடங்களில் இருந்து மின் ஒழுக்கு பாய்ந்ததின் காரணமாக மூச்சுத்திணறி காலஞ்சென்றவர்கள் மரணித்திருக்கிருர்கள்.

(நாளை முடியும்)

---

## அதிபர்கள் மாநாடு

(புங்குடுதீவு, செவ்வாய்)

ஊர்காவற்றுறை கல்வி வட்டாரத்திலுள்ள மகா வித்தியாலயங்களினதும், மத்திய மகாவித்தியாலயங்களினதும் அதிபர்களது விசேட மகாநாடொன்று அடுத்தமாதம் 1ம் திகதி வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வட மாநில வித்தியாதிபதி திரு தி. மாணிக்கவாசகர், வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஸ. நடராசா, திவுப்பகுதி எம். பீ, பண்டிதர் கா. பொ. இரத்தினம், கல்வியதிகாரி, திரு. ஸ. சோமசுந்தரம் ஆகியோர் இம் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

---

## கோரிக்கை

புளியங்குளம், செவ்.

1972-ம் ஆண்டு இலங்கையில் வெளிவந்த எந்த தமிழ்க் கவிதை நூலுக்காவது இலங்கைச் சாகித்தியமண்டலப் பரிசு வழங்கப்படவில்லை. இது தமிழ் மக்களையும், தமிழ்ப் புலவர்களையும் அவமதிக்கும் நோக்கத்துடன் செய்யப்பட்டதா? அன்றேல் சாகித்திய மண்டல சபையில் தமிழ் கற்றறிந்த கல்விமான்கள் இல்லாத காரணத்திலுல் தமிழ்க் கவிதை நூல்களுக்குப் பரிசு வழங்கப்படவில்லையா?

மேற்கண்ட கோரிக்கை புளியங்குளம் சைவமகாசபையின் விசேட பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு கலாச்சார மந்திரிக்கு அதன் பிரதி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

---

## வண்டியும், மாடுகளும் உரியவரிடம் சேர்ந்தன

மாவிட்டபுரம், செவ்வாய்

நடுநிசியில் ஒருவருக்குச் சொந்தமான மாட்டுவண்டியைப் பூட்டிக்கொண்டு கம்பி நீட்ட முயன்ற சமயம் பாதுகாப்புப்படை உத்தியோகத்தரிடம் மாட்டிக்கொண்டாராம் ஒருவர்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த தம்பையா சுப்பிரமணியம் என்பவரது 1,600 ரூபா பெறுமதியான மாடும், வண்டியும் மாவிட்டபுரம் சந்தியிலுள்ள அவரது கடைக்கருகில் நின்றபோது இரவு 1-30 மணியளவில் சங்கரப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி என்பவர் அவ்வண்டியில் மாட்டைப்பூட்டிப் புறப்படத்தயாரானதாகவும் அச்சமயம் மாவிட்டபுரம் சந்தியில் கடமையாற்றிய யாழ். பாதுகாப்புச் சேவை தெல்லிப்பளைக்கிளை உத்தியோகத்தர் திரு. ஏ. கிருஷ்ணபிள்ளை அவரைப் பிடித்து விசாரித்த உரியவரிடம் ஒப்படைத்தாராம்.

---

## தொடர்ந்து படிக்க அனுமதி மறுப்பு: இளம்பெண் மரணம்

(நெல்லியடி, செவ்வாய்)

தொடர்ந்து படிப்பதற்கு பெற்றோர்கள் அனுமதி வழங்காததால் மனமுடைந்த புலோலி தெற்கைச் சேர்ந்த செல்வி ஈஸ்வரி முருகுப்பிள்ளை (16 வயது) நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

இவரது மரணம் சம்பந்தமாக பருத்தித்துறை மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் விசாரணை நடத்தினர். பருத்தித்துறை பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

விசாரணையின்போது இறந்த பள்ளி மாணவியின் தகப்பன் க. முருகுப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

இறந்த எனது மகள் பருத்தித்துறையில் உள்ள கல்லூரியொன்றில் மேல்வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். எனது வசதியீனம் காரணமாக அவளைக் கல்லூரிக்குப்போக வேண்டாமெனத் தடுத்துவிட்டேன். இதனுல் அவள் அதிக கவலையுடன் காணப்பட்டாள். சம்பவதினத்தன்று அதிகாலை எனது தோட்டத்தில் வேலை செய்வதற்கு நான் சென்றுவிட்டேன். வீட்டிற்கு அண்மையில் உள்ள தோட்டத்தில் நான் வேலை செய்துகொண்டிருந்தபோது வீட்டிலிருந்து அழுகைக்குரல் கேட்டது. உடனடியாக நான் வீட்டிற்குச் சென்றபோது மகள் நஞ்சருந்தியதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றேன். அங்கு மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது என்றுர். இதனையடுத்து தற்கொலை எனத்தீர்ப்பு அளிக்கப்பட்டது.

---

## பஸ்ஸுக்கு நின்றவர் பொலிசில்

பருத்தித்துறை, செவ்.

1972-ம் ஆண்டு களவாடப்பட்ட கைக்கடிகாரம் ஒன்றை நேற்றுமுன்தினம் நெல்லியடி பொலிசார் ஒரு சந்தேகநபரிடமிருந்து மீட்டனர். கரவெட்டியைச் சேர்ந்த திரு. ஆர். ஜெயரத்தினம் என்பவரது கைக்கடிகாரத்தைக் கட்டிக்கொண்டு நெல்லியடிச் சந்தியில் பஸ்ஸுக்குக் காத்துநின்ற ஒரு நபர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டதன் விளைவாகக் கைக்கடிகாரம் மீட்கப்பட்டது. பொலிசார் இதுசம்பந்தமாக வழக்குத் தொடரவிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெலிங்டன்** வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, இரவு 9-30
ஸ., ஞாயிறு பி. ப. 2-30
முத்துராமன்-தேவிகா
**உலகக்கோவில்**

**சாந்தி** (சங்கானை)
தினசரி 6-30, 9-30
ஞாயிறு பி.ப. 2-30
திலிப்குமார்,
வைஜந்திமாலா
**பாட்டாளியின் சபதம்**

**நாகம்மாள்**
சுன்னாகம்
தினசரி 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி-சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**

REGAL (Jaffna)
Daily 4-45, 7, 9-30P.m.
Peter Fonda, Warren Oates
THE HIRED HAND
(Color)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
சிவாஜி—சரோஜாதேவி
ஜெய்சங்கர்
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
**அன்பளிப்பு**
(புதிய கொப்பி)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி
தங்கவேலு
நடித்த
**கற்புக்கரசி** (புதிய கொப்பி)

**ஸ்ரீதர் சினிமா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன்
ஜெயந்தி — வாணிஸ்ரீ
நடித்த
**வெள்ளி விழா**

**றியோ** (யாழ். நகர மண்டபம்)
தினசரி காலை 10-30 பி. ப. 4-45
7-15, 9-45
கராட்டி, ஜூடோ முதலிய பயங்கரக்காட்சிகள் நிறைந்த
**த சைனீஸ் பொக்ஸர்**
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**ராணி சினிமா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஹாஸ்யப் பீரங்கி நாகேஷ்
விஜயலலிதா
நடித்த
**தேன்கிண்ணம்**

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு காலை 10-30.

"சொர்க்கம்" என்பது இறப்புக்குப் பின் ஏற்படுவது அல்ல! இல்லத்தில் நல்லறமும் இன்பமும் நிறைவதே - "சொர்க்கம்"

இந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டு "ராமண்ணா"வின் டைரக்ஷனில் உருவானது!

★சிவாஜி★கே. ஆர். விஜயா
மனோகர், ராஜ்ஸ்ரீ, சச்சு
முத்துராமன், பாலாஜி, நாகேஷ்
மற்றும் பலரின் உன்னத நடிப்பில் முற்றுப்பெற்ற ஈஸ்ட்மென் வர்ண்ணச் சித்திரமே
**சொர்க்கம்**

**லிடோ** (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00, 2-00, இரவு 6-30, 9-30 மணிக்கு
சிவாஜி — லக்ஷ்மி — நிர்மலா
நாகேஷ் — நம்பியார்
நடித்த
**தங்கைக்காக**

## சாராய வேட்டை

இளிநொச்சி, செவ்.

இளிநொச்சிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சி. எம். மீடின் இளிநொச்சியின் மூலை முடுக்குகளில் கள்ளச் சாராயம் விற்கப்படுவதைத் தடுக்கத் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் பலனாக கள்ளச் சாராய விற்பனையில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுள்ளார்கள்.

## இன்று பரணி விழா

யாழ்ப்பாணம், புதன்

யாழ். ஆஸ்பத்திரி ஞானவயிரவ ஆலயத்தில் பரணி நட்சத்திரமான இன்று மாலை 5-30 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையும் பஜனையும் இடம் பெறும்.

ஆஸ்பத்திரி நோயாளரின் நலன் கருதி நடைபெறும் இவ் விழாவில் யாழ். நாவலர் கோட்டு சைவ அபிவிருத்திக்கழக பஜனைக் கோஷ்டியினரின் பஜனையும், சிவ. உ. சோமசேகரம், சைவப்புலவர் வி. கந்தசாமி ஆகியோரும் சொற்பொழிவும் இடம்பெறும்.

## சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம், புதன்)

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி தாதிகள் பயிற்சிப் பாடசாலை சைவ மாணவர் மன்றம் நேற்று சிவராத்திரிவிழா கொண்டாடப்பட்டது. விழாவுக்குத் திரு. க. மார்க்கண்டேயர் தலைமைவகித்தார்.

அவர் பேசுகையில், "இன்று சைவ தமிழ் மக்கள் உலகில் எங்கெங்கு வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் சிவராத்திரி விழா கொண்டாடப்படுகின்றது. இதிலிருந்து சிவராத்திரியின் மகிமையை உணரக்கூடியதாக இருக்கிறது. மகிமையும், ஆத்மீகமும் நிறைந்த சிவராத்திரியைச் சிலர் சினிமா பார்ப்பதிலும், சீட்டாடி இரவைக் கழிப்பதிலும் நேரத்தைக் கழிப்பதை எண்ணும் போது சைவர்களாகிய நாம் கவலையடையாமல் இருக்க முடியாது. தூய்மையான சிவராத்திரியை தூய்மையான முறையில் கொண்டாடுவது முக்கியம். இப்படிச்செய்வதற்கு இதுபோன்ற விழாக்களை எடுத்து மக்களுக்கு விளக்கம் பற்றிக்க சைவ இளைஞர்கள் முன்வரவேண்டும்" என்றார்.

பிரதம விருந்தினராக யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு என். சபாரத்தினம் கலந்துகொண்டு "சிவராத்திரியின் மகிமை" என்னும் பொருள் பற்றி சிறப்புரை நிகழ்த்தினார். பூசையும் ஆராதனைகளும், இன்னிசை நிகழ்ச்சிகளும் நடந்தன. திரு. என். ராஜேந்திரம் நன்றி கூறினார்.

## காங்கேசனில் திருமதி தியாகராசா போட்டி

[யாழ்ப்பாணம், புதன்]

காங்கேசன் துறைத் இடைத் தேர்தல் நடைபெறும்போது வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராசாவின் மனைவி மகேஸ்வரி முற்போக்கு காங்கிரஸ் கட்சிச் சார்பில் போட்டியிடுவாராம்.

இத்தகவலை அவரது கணவரான திரு. தியாகராசா எம். பி. நமது பிரதிநிதியிடம் நேற்று தெரிவித்தார். மன்னார் தொகுதியில் தமிழர் கூட்டணி அபேட்சகர் தோற்கடிக்கப்பட்டுள்ளதையும் திரு. தியாகராசா நினைவுறுத்தினார்.

## நீதிமன்றத்தின் முன்றலேயே விதியை மீறிய பொலிஸ் சாரதி

(யாழ்ப்பாணம், புதன்)

யாழ். மேல்நீதிமன்றத்திற்கு வருகிலுள்ள வாகனப் போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்ட பாதையால் வாகனத்தை ஓட்டிச் சென்ற பொலிஸ் சாரதி ஒருவர் மேல் நீதிமன்ற நீதவான் திரு. ரி. ஜெ. ராசரத்தினத்தினால் எச்சரிக்கப்பட்டார்.

பொலிஸ் சாரதியை தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் நாணயக்காரா கோர்ட்டில் ஆஜர் செய்தார். சட்டத்தை மீறிய பொலிஸ் சாரதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவிருப்பதாக இன்ஸ்பெக்டர் நீதவான் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

நீதவான் பொலிஸ் சாரதியை எச்சரித்தார்.

சட்டத்தரணி ஒருவரும் முன்னர் தடை செய்யப்பட்ட இப்பாதையால் கார் செலுத்திவந்து, பின்னர் கோர்ட்டில் தோன்றி மன்னிப்புக் கோரியிருந்தார். (ஈ)

## "மாற்றங்களை தமிழர் ஏற்கும் தன்மையுடையவர்"

[மல்லாகம், செவ்.]

"தமிழ் மக்கள் நிறைந்த பண்பாடுடையவர்கள் பழமையினையும் புதுமையினையும் ஒருங்கிணைத்து வாழும் வாழ்க்கை அவர்களுடையது. காலப்போக்கில் ஏற்படும் அரசியல் பொருளாதார கல்வி, விஞ்ஞானத்துறைகளின் மாற்றங்களைத் தமிழ் மக்களது வாழ்க்கை பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொள்ளக் கூடியது. குறுகிய மனப்பான்மைக்குத் தமிழ் மக்களது பாரம்பரியத்தில் இடமேயில்லை?"

இவ்வாறு குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாசாலைக் கட்டிடங்களின் புனரமைப்பு விழாவும், விஞ்ஞான ஆய்வுகூட அடிக்கல் நாட்டுவிழாவும் நடைபெற்றதைத்தொடர்ந்து நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய வடமாநில வித்தியாதிபதி திரு. இ. மாணிக்கவாசகர் கூறினார்.

விழா ஆரம்பமாகு முன் பைங்கலக்கடி என்னும் இடத்திலிருந்து ஊர்வலமாக திரு. இ. மாணிக்கவாசகர், உதவிப் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம், கல்வி அதிகாரி, திரு. இராசநாயகம் நிர்வாக அதிகாரி திரு. க. மகாலிங்கம் ஆகியோர் மேளவாத்திய சகிதம் அழைத்துவரப்பட்டனர்.

உதவிப் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் கல்லூரி அதிபர் திரு. தி. திருநாவுக்கரசு [நாவேந்தன்], கல்வி ஆலோசகர் பி. எஸ். குமாரசாமி, நிர்வாக அதிகாரி திரு. க. மகாலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

[யாழ்ப்பாணம், செவ்.]

அரியாலை கொலை வழக்கில் எதிரி கைமேசக் கொலையை ஒப்புக் கொண்டதை தொடர்ந்து 3 வருட கடூழியச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜெ. ராஜரத்தினம் முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டது.

## புத்தூர் கொலை வழக்கு: 18 மாதக் கடூழியம்!

யாழ்ப்பாணம், புதன்

புத்தூர் கொலை வழக்கில் எதிரிக்கு 18 மாத கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜெ. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 73 அக்டோபர் 24ல் புத்தூரில், முத்தர் செல்லப்பா என்பவர், செல்லப்பா கந்தையா என்பவரைக் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம், சட்டத்தரணி உலகநாதனின் அனுசரணையுடன் ஆஜரானார்.

எதிரி கைமோசக்கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதவான் தீர்ப்பு வழங்கினார். (க)

## இரவில் வீட்டுக்குள் ஒழித்திருந்து திருடினராம்

ஆனைக்கோட்டை, செவ்

பகலில் வீட்டுக்குள் புகுந்து ஒளித்திருந்த திருடன் ஒருவன் மறுநாள் அவ்வீட்டிலிருந்து களவாடிய பொருட்களுடன் வெளியேறுகையில் கையும் மெய்யுமாகப் பிடிபட்டான்.

மானிப்பாய் ஆலடிச்சந்தியில் உள்ள குமாரசாமி கம்லாம்பிகை என்பவரின் வீட்டிற்குள் பகல் நேரத்தில் புகுந்த திருடன், பறிக்கையறையிலிருந்த கட்டிலுக்கடியில் காத்திருந்து வீட்டுச்சொந்தக்காரர் நித்திரைசெய்த பின்னர் 700ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலி ஒன்றையும் 500 ரூபா பெறுமதியான கைக்கடிகாரத்தையும் திருடிக்கொண்டு மறுநாள் காலை 7 மணிபோல் அவ் வீட்டைவிட்டு வெளியேறினான். இச்சந்தர்ப்பத்தில் அவனைக் கண்ட ஆனைக்கோட்டை பொலிசைச் சேர்ந்த பண்டாரவடிவேலு திருடனைத் துரத்திப் பிடித்து ஆனைக்கோட்டைப் பொலிஸில் ஒப்படைத்தார்.

மேற்படி நபர் வவுனியாவை சேர்ந்த திருநாவுக்கரசு தர்மலிங்கம் (வயது 40) என்பது பொலிஸ் விசாரணையின்போது தெரியவந்தது.

அந்நபர் தொடர்ந்து பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

## கோரிக்கை

வேலணை, செவ்.

அரசின் ஆதரவுடன் நடத்தப்பட்டுவரும் தையல் பயிற்சிப் பாடசாலையை இவ்வாண்டு மடத்துவெளி மக்களின் நன்மை கருதி மடத்துவெளியில் அமைத்து இப்பகுதி பெண்கள் தையல் பயிற்சி பெறுவதற்கு வசதிசெய்து தருமாறு புங்குடுதீவு மடத்துவெளி சனசமூகநிலையம் கோரியுள்ளது.

## இருவர்—

[6-ம் பக்கத் தொடர்ச்சி

ஒன்றுடன் வெளியேறினர்.

தமது ஒன்றரை வயது பிள்ளையையும் தாலிக்கொடியையும் கணவரின் உறவினரிடம் கொடுத்து விட்டதாகவும் தாம் இருவரும் சேர்ந்து வாழும்போவதாகவும் பத்திரமா பொலிசாரிடம் தெரிவித்தார்.

டாக்டர் ... பரிசோதனை செய்தபின் ... தீர்ப்பளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தமக்கு யாதேனும் இழிவு நேர்ந்தால் உயிர் வாழாத மானம் உடையவரின் புகழை உலகத்தார் தொழுது ஏத்தி நிற்பார்கள். — தெய்வப்புலவர்.


# ஈழநாடு

(27-2-74)


## மன்னார் முடிவு

மன்னார் உபதேர்தல் முடிவு மக்களைச் சிந்திக்க வைக்கும்; அரசாங்கத்துக்கு எதிரான தீர்ப்பென்று எப்பவோ முடிந்தகாரியமாயிருந்தபோதும் ஐ. தே. கட்சியின் வெற்றி ஆளுங்கட்சியினரை விழிப்படையச் செய்யும் தன்மையது.

வெற்றி தனக்குத் தானென்று நம்பியிருந்த ஐ. தே. கட்சியும், தமிழரசுக் கட்சியும் ஆயிரக்கணக்கில் அதிகப்படியான வாக்குகள் கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்தனர்; இருகட்சிகளும் தங்களாலியன்ற பிரசாரம் நடத்தினர். அதிகப்படியான வாக்குகள் எழுபத்தைந்தாயிருந்தபோதும் தீர்ப்பு தெளிவானதென்பதை ஆட்சேபிக்கமுடியாது.

தமிழ்மக்களின் பிரச்னை மொழியுரிமை முதல் சகல ஜீவாதார உரிமைகள் தேடியப் பிரச்னையென்று நாம் கருதியபோதிலும், இன்றைய நெருக்கடியில் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு அத்தியாவசியமான பொருளாதாரப்பிரச்னைக்கு இரண்டாவதென்பதில் எவ்விதசந்தேகமுமில்லை. அரிசிப் பிரச்னையா? அல்லது அரசியல் பிரச்னையா? இன்று மன்னாரில் ஒருகொத்து 1-90க்கு விற்கும் அரிசியை நாம் கருதவில்லை; வாழ்க்கைப் பிரச்னையையே நாம் பொதுவாகக் குறிப்பிடுகிறோம். ஏழைப் பொதுமக்களுக்கு அரிசிப் பிரச்னையே முதலானது. சிங்கள மக்களுக்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ அதுவே முக்கியமானது. தன்மான உணர்வுடன் சமமாக வாழ்வதற்கும் உணவே முதல் தேவை; எனவேஇந்த உபதேர்தலில் அரசாங்கத்துக்கு எதிராக விழுந்த வாக்குகள் நிதானமானவை. ஸ்திரமானவை. மக்களின் இன்னல்களை குறைக்கவல்ல ஆட்சி ஒன்றை அமைக்கவல்ல ஒரு கட்சியையே நாடினரென்று நினைப்பது தவறாகாது.

போட்டியிட்ட கட்சிகள் இரண்டும் எதிர்க்கட்சிகள் என்பதை நாம் மறந்துவிடலாகாது; எனவே ஆளுங்கட்சியினரின் இன்றைய போக்கு சரியா பிழையா என்ற கேள்வி எழுவதற்கு இடமில்லை; பிழையென்ற அடிப்படையில் நடைபெற்ற போட்டியில் நாம் கவனிக்க வேண்டியது ஒன்று. தமிழ்ப் பிரதேசத்தில் நடைபெற்ற ஓர் உபதேர்தல் இது. தமிழரசுக்கட்சிக்கு பல்லாண்டுகளாகச் சொந்தமென்றிருந்த தொகுதி இது; புதிய அரசியல் திட்டத்தைத் தமிழ்மக்கள் அங்கீகரிக்கவில்லை என்பதை எடுத்துக்காட்ட தமது பதவியை இரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் ராஜினாமாச் செய்தபின் தமிழ்ப் பிரதேசத்தில் நடந்த முதல் உபதேர்தல் இது; காங்கேசன்துறை உபதேர்தலை அரசு நடத்தாதபோதும் மன்னார் மக்கள் இதற்கு நல்ல மறுமொழிகூறச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது; தமிழரசுக்கட்சி எதிர்பார்த்த மகத்தான வெற்றி கிடைத்திருந்தால், இலங்கைத் தமிழ்மக்கள் 30 லட்சம் பேரின் வெற்றியென்று தமிழரசுக்கட்சி தன்மானப் பிரச்னையை முன்வைக்கத் தவறியிராது.

எனவே மன்னாரில் நடந்தது என்ன? காட்டை முழுமையாகப் பார்க்க முயலின்ற ஒருவர், அங்கு அடர்ந்து நெருங்கிநிற்கும் மரங்களை நோக்கினாலல் காட்டின் முழுத்தோற்றம் பிசகுபடுமென்பது தெளிவு; 'சாதிகளும் பிறவென்னும் கழிப்பட்டுத் தடுமாறியிருந்திருப்பார்கள்' மன்னார் மக்கள்; இது மனித குலத்துக்கே பொதுவான மயக்கஉணர்வு அதுதவிர மன்னாரில் நடந்தது மக்கள் கவனத்திற்குரியது; இன்று பிரதேசப் பிரச்னையிலும் பார்க்க முக்கியமானது தேசியப் பிரச்னை அரசாங்கத்தை எதிர்த்து வாக்களிக்கும் சாதாரண மக்கள் சிந்தையிற்கொண்டதென்ன? ஆட்சியாளர் கேட்கவேண்டிய கேள்வி இது.

நிம்மதியான, நிதானமான வாழ்வுக்கு உதவும் ஆட்சியே அவர்களின் அவசியதேவை; தமிழரசுக்கட்சி அவ்வித ஆட்சியை அமைக்கும் சக்தியற்றது; எனவே ஐ. தே. கட்சியே மன்னார் வாக்காளரின் மறுமொழியாகும். போட்டி கடுமையாகவிருந்ததுதான் முடிவின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகின்றது.

தமிழரசுக்கட்சியில், தமிழர் முன்னணியில் அனுதாபமுள்ள பலருங்கூட ஐ. தே. கட்சிக்கு வாக்களிப்பதால் தாம் பெருங்கெடுதியான செயலில் ஈடுபடவில்லையென்று தம்மைத் தேற்றிக்கொள்வார்கள்

நாட்டின் நெருக்கடி நிலைமைக்கு. ஸ்திரமற்ற ஆட்சிக்கு முடிவுகட்டுவதற்கு தேவைப்படுவது ஐ. தே. கட்சியேயொழிய தமிழரசுக் கட்சியல்லவென்பதே மன்னார் தேர்தல் பிரதிபலிக்கும் முடிவாகும்.

---

## காமராஜர் தோற்பாராம்

### மொரார்ஜி கூறுகிறார்

(புதுவை, பெப். 27)

"புதுவையில் காமராஜர் படுதோல்வி அடைவார்" என்று ஸ்தாபனகாங்கிரஸ் தலைவர் மொரார்ஜி தேசாய் ஜோஸ்யம் கூறியுள்ளார். இந்தக் கருத்தை பத்திரிகையாளருக்கு அவர் தெரிவித்தார்.

புதுவையிலும் தமிழ்நாட்டிலும் இந்திராகாங்கிரசுடன் ஸ்தாபனகாங்கிரசை இணைத்தது காமராஜர் செய்த பெரிய தவறாகும். இதன் விளைவாகக் காமராஜர் மக்கள் ஆதரவை இழக்கத் தொடங்கிவிட்டார் என்று அவர் கூறினார்.

---

## பாலரின் கைப்பணிப் பொருட்காட்சி

(ஊரெழு, செவ்.)

அரசாங்கத்தின் புதிய கல்வித் திட்டத்திற்கு அமைய இந்தப் பொருட்காட்சி அமைந்திருக்கிறது. கலை, விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடநெறிகளை உள்ளடக்கியதாக இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் கைப்பணிப் பொருட்களை பார்க்கும்போது அரசாங்கத்தின் புதிய கல்வித் திட்டம் எத்தகைய பயன்களைத் தரக்கூடியது என்பதை உணர்த்துகிறது' என்று ஊரெழு கணேச வித்தியாசாலையில் நடைபெற்ற முதலாம் இரண்டாம் வகுப்பு மாணவர்களின் கைப்பணிப் பொருட்காட்சியை திறந்து வைத்துப் பேசிய மேற்படி பாடசாலையின் அதிபர் திரு. க. துரைராசா கூறினார்.

இந்தப் பொருட்காட்சியில் மண்ணினால் செய்யப்பட்ட உருவங்கள் கடதாசிகளினால் செய்யப்பட்ட மாலைகள் சப்பல்கள், பொம்மைகள், பல விளையாட்டுப் பொருட்கள், முருங்கை இலைச் சாற்றின் உதவியுடன் வரையப்பட்ட கண்ணைக் கவரும் அழகான சித்திரங்கள் போன்ற பல வகையான பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன.

---

## உருளைக்கிழங்கு திருடினராம்

மாவிட்டபுரம், செவ்.

ஏழாலையைச் சேர்ந்த கே. நல்லதம்பி என்பவரது தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த உருளைக்கிழங்குகளை திருடியதாக மல்லாகம் கோட்டைக்காட்டைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

பொலிசார் அந்நபரை விசாரித்த சமயம் அந்த உருளைக்கிழங்கு ஏழாலையைச் சேர்ந்த கே. நல்லதம்பி என்பவரின் தோட்டத்தில் களவாடியதாக ஒப்புக்கொண்டாராம். அத்துடன் முன்பும் பல குற்றங்களில் ஈடுபட்டவர் என்பதும் தெரியவந்துள்ளது.

---

## "சனிக்கிழமை பாடசாலை வேண்டாம்"

[யாழ்ப்பாணம், புதன் [

காலதாமதமாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் ஏற்பட்டகால தாமதத்தை ஈடுசெய்ய சனிக்கிழமைகளில் கடமைகளை மேற்கொள்வதை நீக்கவேண்டும் என கல்வி மா அதிபரைக் கோரும் தீர்மானமொன்றினை நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை ஆசிரியர் சங்க யாழ். மாவட்டக் கிளையான வடமாகாண ஆசிரியர்சங்க நிர்வாகசபை நிறைவேற்றியுள்ளது.

க. பொ. த. (சாதாரணம்) பரீட்சை கிடைத்தள் பல் [illegible] காரணமாகவே பாட [illegible] [illegible] (க)

---

## அராலி கொலைமுயற்சிவழக்கு இன்று தொகுப்புரை

(யாழ்ப்பாணம், புதன்)

அராலி கொலை முயற்சி வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டது. இருதரப்பு சாட்சியங்களும் முடிவடைந்தது. இன்று காலை தொகுப்புரை ஆரம்பமாகும்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதியரசர் வி.ஜெ ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் அராலியில் 73 ஜூன் 6ம் தேதி கந்தையா நடராசா என்பவர், மாணிக்கம் ராசரத்தினத்தை கொலை செய்ய முயற்சித்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம், சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம், சட்டத்தரணி கே. குணரத்தினம் ஆகியோரின் உதவியுடன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி பி. இராமநாதன் ஆஜரானார்.

---

## "கல்வியில் மன்னார் முன்னேறும் காலம் தூரத்திலில்லை"

(மன்னார், செவ்வாய்)

"இப்பொழுது நடைமுறையில் இருக்கும் இடமாற்றத் திட்டப்படி 45 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களே அதிகமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமைபுரிகின்றார்கள். ஆனால் மன்னார் மாவட்டத்திலே கணித விஞ்ஞான ஆசிரியர்களும், ஆங்கில ஆசிரியர்களும், பயிற்றப்பட்ட பட்டதாரிகளுமாக பல இளைஞர்கள் படிப்பிக்கிறார்கள் இந்த நிலையில் இன்னும் சில ஆண்டுகளில் மன்னார் மாவட்டத்தின் கல்வித்தரம், யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வித்தரத்தை மிஞ்சிவிடும் கல்வியில் மாத்திரமன்றி, விவசாயத்துறையிலும் முன்னேறக்கூடிய வாய்ப்பு மன்னார் மாவட்டத்திற்கே உண்டு. விவசாயத்திற்கு ஏற்ற பரந்த நிலப்பரப்பும் இங்கே உண்டு. அதனால் மன்னார் மாவட்டத்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள், இம் மாவட்டத்தை தமது சொந்த மாவட்டமாக மாற்றிக்கொண்டு இங்கிருந்தே தொடர்ந்து பணி புரியவேண்டும்."

இவ்வாறு மன்னார் மாவட்ட அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவரும், இலுப்பைக்கடவை மகாவித்தியாலய அதிபருமான திரு. ஆ. நடராசா தமக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடைக்கு நன்றி தெரிவித்துப் பேசும்போது கூறினார்.

பிரிவுபசாரத்துக்குத்தலைமை வகித்துப் பேசிய ஆசிரியை திருமதி க. சுப்பிரமணியம், அதிபர் திரு. ஆ. நடராசாவின் ஆறு ஆண்டுச் சேவைக் காலத்தில் இப்பாடசாலையின் ஆசிரியர் தொகை இரண்டு மடங்காக அதிகரித்ததென்றும், காடடர்ந்து கிடந்த பாடசாலை மைதானம் விளையாட்டிடமாக மாற்றப்பட்டுள்ளதென்றும் குறிப்பிட்டார்.

செல்விகள் இ. அன்னலெட்சுமி, தி. வாகினி, பொ. ஜெயசோதி ஆகியோரும் பொன்னையா. கை. மணிவாசகன், வை. தருமலிங்கம் முதலியோரும் இக்கூட்டத்தில் பேசினர். (குவிம)

---

## இருவர் கள்ளத்தொடர்பால் ஓர் இளைஞன் தற்கொலை

(ஆனைக்கோட்டை, செவ்.)

கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட இளைஞர் ஒருவரின் மரணவிசாரணையில் சாட்சியமளிக்க ஆஜர் செய்யப்பட்ட கள்ளக்காதல் ஜோடி ஒன்று தாம் இணைந்து வாழவிரும்புவதாக பொலிசாரிடம் கூறிச்சென்ற சம்பவம் ஒன்று ஆனைக்கோட்டையில் இடம் பெற்றது.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த குலசேகரம் (வயது 21) என்ற வாலிபர் பத்மினா (வயது 21) என்னும் மணமான இளம்பெண் ஒருவருடன் இரகசியத் தொடர்பு வைத்திருந்தார் என்றும் இவர்களின் தொடர்புக்கு தற்கொலை செய்துகொண்ட தனபாலன் என்னும் 19 வயது வாலிபர் தரகராக இருந்து வந்தார் என்றும் விசாரணையின்போது தெரியவந்தது.

ஆனைக்கோட்டை சாவற்காடு சஞ்சடி வயிரவர் கோயிலடியில் உள்ள மாமரம் ஒன்றில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட தனபாலன் என்பவரின் மரண விசாரணையை, மரணவிசாரணை அதிகாரி திரு சேனாதிராசா நடத்தினார். இதில் சாட்சியமளித்த குறிப்பிட்ட பெண் பத்மினா தமக்கும் குலசேகரத்துக்கும் இடையே உள்ள தொடர்புக்கு உதவியாக இருந்த தனபாலன் இத்தொடர்பு பற்றியும் இதில் தனது உதவி பற்றியும் கொழும்பில் உள்ள தமது கணவருக்குத் தெரியவந்தால் விஷயம் விபரீதமாகிவிடும்" என்று அடிக்கடி கூறிவந்தார் என்று தெரிவித்தார்.

பத்மினாவின் காதலனான குலசேகரமும் சாட்சியமளித்தார். இருவரின் சாட்சியங்களின் பின்னர் இருவரும் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் இருந்து சூட்கேஸ்

(5-ம் பக்கம் பார்க்க)

---

## மரண அறிவித்தல்

### க. பொன்னையா (கிராமசேவகர்)

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த கதிர்காமு பொன்னையா காலமாகிவிட்டார். இவர் வள்ளிப்பிள்ளையின் அன்புக்கணவரும், ஸ்ரீதரன், பாலச்சந்திரன், புஷ்பராணி, பாஸ்கரன் ஆகியோரின் தந்தையும், ஆசிரியர் சின்னத்துரை, பாறுவதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று காலை 10-30 மணிக்கு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

646 தகவல்: இளங்கோ.

---




அருளுடைமை

பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார் அற்றார் மற்றாதல் அரிது.

[illegible]

இந்தப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] 1974-ம் ஆண்டு பெப்ரவரி 27-ம் திகதி [illegible] The Eelanadu [illegible] No. 65, Jaffna. Telegrams: "EELANADU" [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org